அக்டோபர் 2012
OCTOBER 2012
6 - 6
VASANTHAM
TAMIL MONTHLY
مجلة الربيع    ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

மாத இதழ்
The Spring

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!






## ஏகஇறை முழக்கங்கள்...!
## எல்லையில்லாப் பேறுகள்.,!

இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

ஆணுக்கு 'ஹூர்'..!
பெண்ணுக்கு யார் ..?



IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# மது தரும் "உற்சாகம்"..!
# பகைமை-வெறுப்புக்கு அடித்தளம்..!!

**இறை நம்பிக்கை கொண்டவர்களே! மது, சூதாட்டம், பலிபீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும். அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்! அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.** மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக்கிடையில் பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவுகூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவே ஷைத்தான் விரும்புகிறான். **இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வீர்களா?**

**-திருக் குர்ஆன் 5:90,91**



# இந்த இதழில்..!




செப்டம்பர் 2012
SEPTEMBER 2012
6 - 5
VASANTHAM TAMIL MONTHLY
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

வசந்தம்
வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!
மாத இதழ்
The Spring

VASANTHAM
TAMIL MONTHLY
OCTOBER 2012
அக்டோபர் 2012
மலர் 6 இதழ் 6



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

GENERAL SUPERVISOR
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

EDITOR
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

EDITORIAL BOARD
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

INITIAL LAY-OUT
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்
مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency



PUBLISHER வெளியீடு
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE



CONTACTS தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
Editor's Desk
22447526, 22444117 | Extn: 208
Mob 97848068 -97266683 (Hotline)
FAX: 22400057
Attn: IPC—VASANTHAM
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
ipc.org.kw
vasanthamtamil.com

SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
facebook/vasanthamtamil
www.twitter/vasantham2k
YouTube Scribd.






ஏகஇறைஇல்லத்தை நோக்கிய தூய எண்ணத்துடன் புறப்பாடு.,!
சாத்தானிய செயல்களுக்கு தர்மவேட்டு..!நற்செயல்களுக்கு
உன்னத பேறு..! ஓடச்செய்யுது நல்லெண்ண ஆறு..!


## வழித்தடங்கள்
அப்துல்லாஹ்-அபூஸாத்

ரம்மியம் பொதிந்த ரமளான் நிகழ்வுகள்..! 10



IPC வழித்தடங்கள் மற்றும் புனித ரமளான் சிறப்பு நிகழ்வுகள்..! இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோ. முஹம்மத் காஸிம் அவர்களுக்கு பிரிவு உபசார விழா...!

## விருந்தினர் பக்கம்
Dr. ஜாகிர் நாயக்



ஆணுக்கு 'ஹூர்' பெண்ணுக்கு..? 17

பாரத விடுதலைக்கு அடித்தளமிட்ட முஸ்லிம் மாவீரர்கள்..!

## ஆய்வு
ராபர்ட் எ.ஃப். ஷெடிங்கர்

முஸ்லிமா.., இயேசு கிறிஸ்து..? 13

மேற்கத்திய அறிஞரின் ஆய்வு உண்மைகள்..!

## கவித்தூறல்கள்
ரஷி அனிஸ்

அன்பான அநாதைகள்..! 15

02 வாசகர் சுகந்தங்கள் – வாசக நெஞ்சங்களிடமிருந்து.!
03 எண்ணச் சிந்தனை – ஆசிரியரிடமிருந்து..!
07 வழிபாடு – மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனீ
08 பேட்டி – M.H. ஜவாஹிருல்லாஹ்
14 தொடர் – மு.அ.அப்துல் முஸவ்விர்
16 மழலையர் சோலை – சவுந்தர்யம்
18 கதம்பம் – அபூமதீஹா
19 சுற்றத்து செய்திகள் – அழகிய சிறியவன்
20 அறிவுப் போட்டி-44

بريد الربيع - كلمة العدد -"الحج" لماذا؟ - الأضحية : الفضائل و الأحكام - المواقع الاجتماعية و أثرها
أنشطة اللجنة - المرأة المثقفة - ماذا يمنح الإسلام المرأة؟ - هل عيسى عليه السلام مسلم؟ - كبار السن (النشيدة)
صفحة الأطفال - جامعة أم القرى - أخبار العالم - الوفيات - مسابقة



# ஆக்கபூர்வ வழிகாட்டி அழகிய வசந்தம்..!

**அஸ்மா**

நயவஞ்சகத்தின் அனைத்து அம்சங்களையும் நவீனகால விஷயங்களின் அடிப்படையில் சுட்டிக் காட்டிய வசந்தம், சமூக மாற்றத்துக்கு ஒரு ஆக்கபூர்வ வழிகாட்டியாக செயற்படுகின்றது என்பதிர் ஐயமில்லை..!மனித சமூகம் திருந்தட்டும்!

**M. அப்துல்லாஹ்**
ஆரணி- தமிழகம்
ஃபர்வானியா - குவைத்

ஆசிரியர் தினத்தை கவுரவப்படுத்திய அதேவேளையில்,அனைத்துக்கும் மூலம் ஏகஇறைவனே என அவனைப் முதன்மைப்படுத்திய அந்தத் தலைப்பு 'ரியல்லி சூப்பர்..!'



**அஸ்மா**
தஞ்சை - தமிழகம்
ருமைதியா - குவைத்

பர்மா நிலை கண்ணீர் வரவழைத்துவிட்டது..! நடிகைக்கு கால் சுளுக்குப் பிடித்ததிலிருந்து ஆரம்பித்து,அவளின் கர்ப்பம் வரை செய்தி வெளியிடும் மீடியாக்கள் எங்கே போய்விட்டன



**S நிலாமுகன்**
ஆண்டாள்குப்பம் - தமிழகம்
சால்மியா - குவைத்

ஒரு இயக்கவாதியாக பேராசிரியரின் பேட்டி அருமை..!அரசியல்வாதிக்கான வினாக்களை ஆசிரியர் ஆரம்பத்திலேயே சாமர்த்தியமாக தவிர்த்துவிட்டதன் மூலம் வசந்தம் அழகிய தொரு நடுநிலையை பேணுவதைக் காட்டியிருக்கின்றார் ஆசிரியர்...!



**ருஸான் அஹ்மத்**
நிகம்பு - இலங்கை
மங்காஃப் - குவைத்

பர்மா நிலை கண்ணீர் வரவழைத்துவிட்டது..! நடிகைக்கு கால் சுளுக்குப் பிடித்ததிலிருந்து ஆரம்பித்து,அவளின் கர்ப்பம் வரை செய்தி வெளியிடும் மீடியாக்கள் எங்கே போய்விட்டன பர்மா விஷயத்தில்...?




**தேவகி**
தஞ்சை - தமிழகம்
ரிக்கய் - குவைத்

மகளிர் மீதான வன்கொடுமைகள் தொடர் பல விஷயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது.பணத்துக்காக பத்திரிகை தர்மங்களை அடகு வைக்கும் நவீன ஊடகங்களுக்கு மத்தியில் வசந்தம் ஒரு சமூக அக்கறைமானி..!



அழகிய வசந்தம் பல நல்ல அம்சங்களைத் தன்னுள்ளே கொண்டிருக்கின்றது. மேலும் வளர இறைவனை இறைஞ்சுகின்றோம்.!



rahman212@gmail.com - துபை

அன்புள்ள வாசகர்களே! அனைவருடைய பெயர்களையும் இங்கு சேர்க்க பக்கங்கள் போதாததால்.., சிலரை மட்டுமே சேர்த்துள்ளோம்!அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்!தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!

தொடருவோர்..!

- sharaf.farook
- fazminarazick
- thameemansari.ansari
- zamrath.daliya
- dodge.usman
- ariswana.fathima
- zafar.rahmani
- fathima.ashika
- abdulhameed1971
- Intihusain

இன்னும் பலர்..!

தொடருவோர்..!

Amitabh Bachan@AmitabhBachan
**கயல்விழி**@vimalashriOneindia
mohamed aashik @news1stsms
Kiran Manral. @kiranmanral



அன்பு வாசகர்களே.., படைப்பாளர்களே..! உங்கள் படைப்புக்களை அனுப்பும்போது குறைந்தபட்சம், மின்னஞ்சல் முகவரி,செல்லிடைப்பேசி எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள்..!

# இறுதிப் பேருரையின் இனிய நாதம்..!
# பற்றிப் பிடித்தால் பரவச சுவனம்..!

இதோ, மீண்டும் ஒருமுறை எம்மிடம் வந்திருக்கின்றது.., இஸ்லாமியக் கடமைக்குக் கட்டியம் கூறும் இன்னொரு மாதம்..! அது உரைப்பது அண்ணலார் (ஸல்) அவர்கள் ஆற்றிய இறுதிப் பேருரையின் இனிய நாதம்..!அதனைப் பற்றிப் பிடித்தால் கிட்டப் போவது வெற்றி அரியாசனம்.,!

ஆம், உடல்-பொருள் நலனும் வசதியும் பெற்ற ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாக்கப்பட்ட இந்த ஹஜ் கடமையை நிறைவேற்றும் தியாக நாட்கள் எம்மை அடையும்போதெல்லாம், புதிதாக சொல்ல எதுவும் இல்லாதுபோல் நமக்குத் தோன்றும்..!ஆனால், அந்தக் கடமை தன்னுள் மறைத்திருக்கும் எண்ணற்ற அருட்பேறுகள் எக்காலத்துக்கும் எத்துணை முறை எடுத்துரைத்தாலும் சலிப்படையச் செய்யாது.

ஹஜ் கிரியைக்காக,நமக்குப் புரிந்த மொழியில் நூல்களைத் தேடிப் பிடிப்பதிலிருந்து ஆரம்பித்து,நவீன வசதிகளுக்கேற்ப காணொளிக் காட்சிகள்,நுண்மனனிகள் (Flash Memory) வரை அது தொடர்பான தகவல்களை சேகரித்து ஆர்வமுடன் திரள்கின்றோம். அதுவும் குறிப்பாக இளைய சமூகம் நபிவழியில் இந்த கடமையை நிறைவேற்றக் காட்டும் ஆர்வம் பிரமிக்க வைக்கின்றது.

ஆம்!இந்த ஈடுபாடு தேவையான, மகிழ்கூறத்தக்க அம்சமே..!ஏகஇறைவன் அனைவரின் ஹஜ்-ஜையும் ஏற்புடையதாக ஆக்குவானாக..!அந்த பாக்கிய பேறு கிட்டாதவர்களுக்கு விரைவில் கிட்டச் செய்வானாக..!பாருங்கள்..!ஹஜ் நிறைவேற்ற நாம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் தூய எண்ணத்தில் அமையும்போது, அதற்கு இறையுதவி கிட்டும் என்பதில் ஐயமில்லை.!

அதேபோல், அத்தகையதொரு ஹஜ் தொடர்பான தனது இறுதி உரையில் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பொட்டிற் அடித்தாற்போல் பதித்து வைத்த பொன்கட்டளைகளை நாம் சிரமேற்கொண்டு பின்பற்றுகின்றோமா..?

அன்னாருடைய ஒவ்வொரு கட்டளையையும் சுட்டிக்காட்டி ஏனேனும் ஒரு கூட்டத்தை அல்லது நிகழ்வை அல்லது தொடர்பான எதுவொன்றையும் சுட்டிக் காட்டி ஏதேனும் பழியைத்தான் போடுகின்றோமே தவிர அதன் தாத்பர்ய கோட்பாட்டை உணருவதில்லை.

ஆம்..!கேளுங்கள்.,!அந்த இறுதி இறைத்தூதனின்.., இளகிய மனத்தவனின்.., இன்னாகூறாத இனிய நாயகனின்.., இன்சொற்களின் இரத்தினச் சுருக்கத்தை..:-

உங்களில் ஒருவர் மற்றவர் உயிரையும் பொருளையும் மானத்தையும் புனிதமாகக் கருதுங்கள். தந்தையின் குற்றத்திற்காகப் பிள்ளையை அல்லது பிள்ளையின் குற்றத்திற்காகத் தந்தையை தண்டிக்கப்பட மாட்டாது. அறியாமைக் காலத்தின் அனைத்து செயல்களும் ஒழிக்கப்பட்டுவிட்டது. பெண்கள் குறித்து அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அமானிதமாக அவர்களை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். நீங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை யாதெனில் நல்ல முறையில் அவர்களுக்கு உணவும் ஆடையும் அளிக்க வேண்டும். நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் உறுதியாகப் பின்பற்றினால் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள். அதுதான் அல்லாஹ்வின் வேதமாகும். மக்களே! எனக்குப் பின் எந்தவொரு நபியும் (இறைத்தூதரும்) இல்லை. உங்கள் இறைவனை அதிவிரைவில் நீங்கள் சந்திப்பீர்கள்.

இங்கு வந்திருப்பவர்கள் அனைவரும் இங்கு வராத மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுங்கள். ஏனெனில், செய்தியை கேள்விப்படுபவர்களில் சிலர் நேரடியாகக் கேட்பவர்களைவிட நன்கு விளக்கமுடையவர்களாக இருப்பார்கள். இன்றைய தினம் நாம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்து விட்டோம்" எனும் திருக் குர்ஆன் வசனம் அப்போதுதான் இறங்கியது.

ஆனால், இன்று..?

மற்றவர்களின் மானத்தோடு விளையாடுவது நவீனமயமாகிவிட்டது. தந்தைக்காக பிள்ளை அல்ல.., பேரன்.., கொள்ளுப்பேரன் வரை பழி வாங்குவது சாதாரணமாகி நிற்கின்றது. பெண்களுக்கு உணவும்,ஆடையும் தர வேண்டிய எத்தனையோ ஆண்களின் மனைவிமார்கள் இன்று வளைகுடா நாடுகளில் தம் பிள்ளைகளுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களைவிட்டுச் சென்றதை (திருக் குர்ஆன்,நபிவழியை)ப் பின்பற்ற சொன்னால் அல்லது குறைந்தபட்சம் பின்பற்றினால் பழமைவாதி..!மறுபுறம் மார்க்கத்தில் புதுப்புது அநாச்சாரக் குழப்பவாதிகள்..! அல்லது மார்க்கத்தையே குழப்பிக் கற்பிக்கும் நவீனவாதிகள்!

இத்தனை மாறுபாடுகளையெல்லாம், அரபி,அரபியல்லாத- ஆசிய,ஆப்பிரிக்க,ஐரோப்பிய,அமெரிக்க.. இத்யாதி., இத்யாதி இன மக்கள் பெற்றிருந்தாலும்.., வளைகுடா நாடுகளில் வாழும் நாம் *''அரபியருக்கு அரபி அல்லாதவரை விட. ஓர் அரபி அல்லாதவருக்கு அரபியரை விட. ஒரு வெள்ளையருக்கு கருப்பரை விட. ஒரு கருப்பருக்கு வெள்ளையரை விட''* எனும் ஒரு விஷயத்தில் மட்டும், அரபியரை குற்றஞ்சாட்டுவதில் குறை வைப்பதில்லை சம்பளத்தையோ அல்லது பிற வசதி வாய்ப்புக்களையோ வைத்து..!அதேபோன்று மறுபுறமும்..!

எனவே, அனைத்து மாச்சர்யங்களையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு "நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் உறுதியாகப் பின்பற்றினால் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள்" என்று அண்ணலார் (ஸல்) அவர்கள் சொன்ன திருக் குர்ஆனையும், அவர்தம் வழிமுறையையும் ஏற்று நடந்தால் போதும் அண்ணலார் (ஸல்) அவர்கள் விரும்பிய இறுதி ஹஜ் உரையின் அனைத்து சாராம்சங்களும் அதில் அடங்கிவிடுகின்றது.

ஆம், பற்றிப் பிடிப்போம்.., அந்த இருமை உலகநாயகனின் வழிமுறையை.., நவீன உலகத்தின் வளர்ச்சியையும் அதற்கேற்பப் பயன்படுத்தியே அன்றி.., அவ்வசதிகளிடம் எம் கொள்கைகளை அடகு வைத்து அல்ல..!

**மு.அ.அப்துல் முஸவ்விர்**
ஆசிரியர்
musawir@alnajat.com.kw | musavir2010@yahoo.com | maam2k@gmail.com
http://www.facebook.com/vasanthammonthly | https://twitter.com/Vasantham2k
ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்

# ஏகஇறை முழக்கங்கள்..! எல்லையில்லாப் பேறுகள்..!

**ஏகஇறைஇல்லத்தை நோக்கிய தூய எண்ணத்துடன் புறப்பாடு..! சாத்தானிய செயல்களுக்கு தர்மவெட்டு..! நற்செயல்களுக்கு உன்னத பேறு..! ஓடச்செய்யுது நல்லெண்ண ஆறு..! இந்த அழகிய தாத்பர்யத்தை உலகம் உணரும் நாள் நெருங்குது பாரு..!!**

பொதுவாக, உலக மக்களுக்கு இரண்டுவிதமான பயணங்களைப் பற்றித்தான் தெரியும்.ஒன்று, வாழ்வாதாரம் தேடும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் பயணம்.மற்றொன்று, பொழுதுபோக்கிற்காகவும்,உல்லாசத்திற்காகவும் செய்யப்படும் பயணம்.இந்த இரண்டுவிதப் பயணங்களிலும் மனிதனின் தன்னல நோக்கமும் ஆசையும் அவனை வெளியே புறப்பட ஆயத்தப்படுத்துகின்றன. அவன் வீட்டைத் துறப்பதும் தன்னல நோக்கத்துடன்தான்.குழந்தைகளையும்,உறவினரையும் விட்டுப் பிரிவதும் தனக்காகத்தான்.எனவே,இதில் தியாகம் பற்றிய பேச்சே கிடையாது.

ஆனால், 'ஹஜ்' எனும் பெயர் கொண்ட இந்தப் பயணம் இருக்கின்றதே, இது மற்றப் பயணங்கள் அனைத்துக்கும் முற்றிலும் மாறுபட்டது இந்தப்பயணம் தன்னல நோக்கங்களில் ஒன்றுக்காகவோ- மனத்தின் ஆசைகளின் ஒன்றுக்காகவோ மேற்கொள்ளப்படுவதல்ல.மாறாக, இறைவனுக்காக-அவன் ஏற்படுத்தியிருக்கும் கடமையை நிறைவேற்றுவதற்காக மட்டுமே மேற்கொள்ளப்படுவது.

ஒரு மனிதனின் உள்ளத்தில் இறையச்சமும்,இறையன்பும் இல்லை என்றால், ஹஜ் செய்வதை தனது கடமையாக எண்ணும் உணர்வு இல்லை என்றால், அவன் இந்தப் பயணத்துக்கு ஆயத்தமாகவே முடியாது.எனவே, தன் வீட்டைவிட்டு நீண்ட காலத் தனிமை,தன் உறவினர்களைவிட்டுப் பிரிவு, தன் தொழிலுக்கு வரும் நஷ்டம்,தன் பொருளுக்கு வரும் செலவு ஆகிய அனைத்தையும் ஒரு மனிதன் மனநிறைவோடு ஏற்றும்,பயணச் சிரமங்களை எதிர்நோக்கியும் ஹஜ்ஜுக்காக புறப்பட்டுவிட்டான் என்றால், அவனுள் இறையச்சம்,இறையன்பு,கடமையுணர்ச்சி ஆகியவை இருக்கின்றன என்பதோடு,இப்போது மட்டுமல்ல எப்போதும் அவன் இறைவழியில் அவசியம் ஏற்படும்போதெல்லாம் செல்லச் சித்தமுடையவன்-சிரமங்களையும்,இடர்களையும் சகித்துக் கொள்பவன்-உடல்,பொருள் யாவற்றையும் இறைஉவப்புக்காகத் தியாகம் செய்யக்கூடியவன்-இவற்றிற்கேற்ற நல்ல பக்குவம் பெற்றவன் என்றாகின்றது.

ஹஜ் செய்ய நாடி, அதற்குத் தயாராவது முதல் தன் வீட்டுக்குத் திரும்பி வரும் வரை இரண்டு மூன்று மாதக் காலத்தில் ஒரு மனிதனின் உள்ளத்திலும் மூளையிலும் எவ்வளவு மகத்தான விளைவுகள் தோன்றுகின்றன என்பதை நீங்கள் கணித்துக் கொள்ளலாம்.

இதில் காலத் தியாகம் இருக்கின்றது.!
பொருள் தியாகம் இருக்கின்றது.!
சுகத் தியாகம், ஓய்வுத் தியாகம் இருக்கின்றது.!
உலகத் தொடர்புகள் பலவற்றின் தியாகம் இருக்கின்றது.!
மனத்தின் ஆசைகள்,இன்பங்கள் பலவற்றின் தியாகம் இருக்கின்றது.!
இவையனைத்தும் இறைவனுக்காகத்தான் தியாகம் செய்யப்படுகின்றன.
எவ்விதத் தன்னலமும் இதில்

ஒரு மனிதனின் உள்ளத்தில் இறையச்சமும்,இறையன்பும் இல்லை என்றால், ஹஜ் செய்வதை தனது கடமையாக எண்ணும் உணர்வு இல்லை என்றால், அவன் இந்தப் பயணத்துக்கு ஆயத்தமாகவே முடியாது.





கலக்கவில்லை.

இந்தப் பயணத்தில் ஒழுக்கம்,இறையச்சம் போன்றவற்றோடு தொடர்ந்து இறைநினைப்பு,இறைவனின் பக்கம் துடிப்பு,காதல் ஆகியவை மிக அழுத்தமாய் ஏற்படுகின்றது.அது தமக்குரிய ஒரு நிரந்தரமான-பல ஆண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய தனது தடத்தை மனிதனின் மனத்தில் பதித்துச் செல்கின்றது.

பிறகு கஅபாவின் நிலப்பரப்பிற்குச் சென்று முன்னோரின் சின்னங்களை ஒவ்வோர் அடியிலும் பார்க்கின்றான்.அவர்கள் இறைவனுக்குப் பணிந்து வழிபடுவதில் தம்மிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்தார்கள்.முழுஉலகத்தோடும் போராடினார்கள்.துன்பங்களை அனுபவித்தார்கள்.நாடு கடத்தப்பட்டார்கள்.கொடுமைக்கு மேல் கொடுமையை அனுபவித்தார்கள்.ஆனால், இறுதியில் இறைவனின் வாக்கை மேலோங்கச் செய்துவிட்டார்கள்.அல்லாஹ்வைத் தவிர்த்து மற்றவற்றின் முன்பு மனிதனை அடிமைப்படுத்த முயலும்-சத்தியத்திற்கு எதிரான ஒவ்வொரு சக்தியையும் வீழ்த்தும் வரை அவர்கள் நிம்மதியாக உட்காரவில்லை.

தெளிவான இந்த ஆதாரங்களையும்,புனிதமான சின்னங்களையும் இறைவேட்கையாளன் ஒருவன் பார்த்து உறுதி,ஊக்கம்,இறைவழியில் ஜிஹாத் ஆகிய படிப்பினையைப் பெறுகின்றான்.அநேகமாக வேறு எதிலிருந்தும் இவற்றைப் பெற முடியாது.

கஅபாவை வலம் வருவதால் ஹாஜிக்கு இந்த தீனின்-இறைநெறியின் கேந்திரத்தோடு ஏற்படும் தொடர்பும் ஹஜ்ஜின் சடங்குகள் (மனாஸிக்கே ஹஜ்) நிறைவேறும்போது பல இடங்களில் தங்கி முகாமிடுகையிலும்,பின்னர் அங்கிருந்து புறப்படுகையிலும் ஏற்படுகின்ற அலைச்சல்கள்-அனுபவங்கள் யாவும் ஒரு போர்வீரனின் வாழ்க்கைக்குரிய பயிற்சிகள் அனைத்தையும் அளிக்கின்றது.

இப்பயிற்சியுடன் தொழுகை,நோன்பு,ஜகாத் போன்றவைகளை இணைத்துப் பாருங்கள்.இஸ்லாம் முஸ்லிம்களிடம் இருந்து பெற விரும்பும் ஒரு மகத்தான பணிக்குரிய பயிற்சித் திட்டங்கள்தாம் இவை யாவும் என எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இதனால்தான் கஅபா வரை சென்றுவர வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லிம் மீதும் இந்த ஹஜ் கட்டாயமான கடமை ஆக்கப்பட்டிருக்கின்றது.

இயன்றவரை ஒவ்வொரு காலத்திலும்,அதிகபட்ச முஸ்லிம்கள்

**மனத்தின் ஆசைகள், இன்பங்கள் பலவற்றின் தியாகம் இருக்கின்றது.!**

**இறுதியில் இறைவனின் வாக்கை மேலோங்கச் செய்துவிட்டார்கள். அல்லாஹ்வைத் தவிர்த்து மற்றவற்றின் முன்பு மனிதனை அடிமைப்படுத்த முயலும்-சத்தியத்திற்கு எதிரான ஒவ்வொரு சக்தியையும் வீழ்த்தும் வரை அவர்கள் நிம்மதியாக உட்காரவில்லை.**







இவ்வாறு முழு பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த வழிவகை அமைக்கப்பட்டுள்ளது.

எனினும்,ஓர் அம்சத்தை நீங்கள் கவனிக்கவில்லை என்றால்,ஹஜ்ஜின் பயன்கள் முழுவதையும் கவனிக்க இயலாதவர்களாகவே இருப்பீர்கள்.


ஒவ்வொரு முஸ்லிமும் தனித்தனியே ஹஜ் செய்வதில்லை.உலக முஸ்லிம்கள் அனைவருக்காகவும் ஹஜ்ஜுக்கு ஒரே காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இஸ்லாத்தின் சிறப்பு இதுதான்:

ஒரு செயலில் இரண்டு பயன்கள் அல்ல, ஆயிரம் பயன்கள் தோற்றுவிக்கச் செய்வது! தனித்துத் தொழுவதில் அப்படியொன்றும் குறைந்த பயன் இல்லை.ஆனால், அத்துடன் அணிவகுப்புக்கான நிபந்தனையை இணைத்து, 'இமாமத்து'-க்கான திட்டங்களையும் ஏற்படுத்தி,ஜும்ஆ-பெருநாட்களில் பெரிய அணிவகுப்புக்களை ஏற்படுத்தி, அதன் பயன்கள் எண்ணற்ற அளவில் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தனிப்பட்ட முறையில் நோன்பு நோற்பதும், சீர்திருத்தத்திற்கும் பயிற்சிக்கும் மிகச் சிறந்த வழிதான். ஆனால்,எல்லா முஸ்லிம்களுக்கும் ரமளானின் ஒரே ஒரு மாதத்தை ஏற்படுத்தி எண்ண முடியாத அளவுக்கு அதன் பயன்கள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தனித்தனியே ஜகாத் கொடுப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன.எனினும்,அதற்கு "பைத்துல்மால்" எனும் அமைப்பை ஏற்படுத்தி, அதன் பயன்கள் பெரும் அளவுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய ஆட்சி தோன்றும் வரை-முஸ்லிம்களின் ஜகாத்தை ஓரிடத்தில் சேர்த்து ஓர் ஒழுங்குகுடன் தேவையுள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதினால் எவ்வளவு நன்மையும் நற்பேறும் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் உங்கள் கண்களாலேயே பார்த்துக்கொள்ளும் வரை அதன் பயன்களை உங்களால் துல்லியமாகக் கணிக்க முடியாது.

ஹஜ்ஜின் விஷயமும் இப்படிப்பட்டதுதான். மனிதன் தனித்து ஹஜ் செய்தாலும் அவன் வாழ்வில்




மிகப்பெரும் புரட்சி தோன்ற முடியும். ஆனால், உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒன்று சேர்ந்து ஹஜ் செய்வதற்கான சட்டத்தை ஏற்படுத்தியதன் மூலம் அதன் பயன்கள் அளவிட முடியாதவாறு எல்லையற்ற அளவுக்குப் பெருகிவிட்டிருக்கின்றன.

இதுவே, ஹஜ்ஜின் மாபெரும் பேறு...!

# ‘குர்பானீ’ எப்படி..?



ஹஜ்ஜின்போது புரியப்படும் முக்கியமான ஒரு செயல்பாடு, பிராணியைப் பலியிடுவது..!நாம் பொதுவாக இதனை குர்பானீ என்று உள்ளூர் வழக்கில் சொல்வதுண்டு. அதாவது, உளுஹிய்யா..!

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு பின் இறை திருப்தியை நாடி அறுக்கப்படும் பிராணிக்கு இது சொல்லப்படும் ..! இது நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்திய வழிமுறை-சுன்னத்தாகும்.

கொம்புள்ள கறுப்பு நிறம் கலந்த இரண்டு வெள்ளை நிற ஆடுகளை நபி (ஸல்) அவர்கள் உழ்ஹிய்யாவாக கொடுத்தார்கள் அப்போது பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று கூறி அவ்விரண்டின் ஒரு பக்கத்தின் மீது தனது காலை வைத்து கையால் அறுத்தார்கள்.
ஆதாரம் - புகாரி

## உளுஹிய்யா கொடுப்பதற்கு தகுதியான பிராணிகள்

- ஆடு. மாடு ஒட்டகம் (புகாரி)
- ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆடு போதுமாகும் - (திர்மிதி)
- மாட்டிலும் ஒட்டகத்திலும் ஏழு பேர்கள் பங்கு கொள்ளலாம் - (திர்மிதி)

உளுஹிய்யாவிற்கான கால் நடைகளில் கீழ்க்கண்ட குறைகள் இருக்கக்கூடாது:
கண் குருடு கடுமையான நோயானவை!
மிகவும் மெலிந்தவை, நொண்டியானவை!
அங்கங்கள் குறையுள்ளவை..!

## நேரம்

ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகைக்கு பின் அறுக்க வேண்டும்.

யார் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது உளுஹிய்யாவாக ஆகாது அவர் தன் குடும்பத்தின் தேவைக்காக அறுத்ததாகவே கணக்கிடப்படும். யார் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அவர் இன்னும் ஒரு முறை குர்பானீ கொடுக்கட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
ஆதாரம் - புகாரி, முஸ்லிம்

## அறுக்கும் முறை

- ஆடு மாடுகளை படுக்கவைத்து ஒருக்கணித்து அறுக்க வேண்டும் (முஸ்லிம்)
- ஒட்டகத்தை நிற்கவைத்து அறுபடும் நரம்புகள் வெட்டப்படும் அளவுக்கு அறுக்கும் கருவியால் கீறிவிட வேண்டும். (முஸ்லிம்)
- அறுக்கும் போது பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று கூற வேண்டும். (புகாரி)



## உளுஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளை பயன்படுத்தும் முறை

உளுஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளின் முடிகளையோ தோல்களையோ மாமிசங்களையோ அறுத்தவருக்கு கூலியாகக் கொடுக்கக்கூடாது.



குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களை மேற்பார்வை செய்வதற்கு என்னை நபி (ஸல்) அவர்கள் நியமித்தார்கள், அவைகளின் மாமிசம்,தோல் ஆகியவற்றை தர்மமாகவே கொடுக்க வேண்டும் என்றும் அவற்றில் எதையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது என்றும் கூறினார்கள் அறுப்பதற்குரிய கூலியை நாங்கள் தனியாகவே கொடுப்போம் என அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
ஆதாரம்:- புகாரி, முஸ்லிம்

## உளுஹிய்யா கொடுப்பவர் செய்யக் கூடாதவைகள்

துல் ஹஜ் மாதம் பிறந்ததும் உளுஹிய்யா கொடுக்க நாடியவர் தன்னுடைய முடி மற்றும் நகத்திலிருந்து எதையும் அகற்றக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள். ஆதாரம்:- முஸ்லிம்



# "சமுதாயம் விழிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும் ..!"

**ஆசிரியருடனான பேராசிரியரின் பேட்டி தொடர்கின்றது..!**

- ,jid vt;thW ghu;f;fyhk;?

*உதாரணத்துக்கு நாமெல்லாம் சிறுவர்களாக இருந்தபோது, எங்கள் கிராமங்களில்.., ஏன் பொதுவாக எல்லா ஊர்களிலும், காலையில் ஸுப்ஹு தொழுதுவிட்டு திரும்பும்போது,வீட்டுக்கு முன்பாக தண்ணீர் தெளித்து, சுத்தம் செய்வது ஒருபுறம் நடக்க,முஸ்லிம் வீடுகளிலிருந்து திருக் குர்ஆன் ஓதும் சப்தமும்,சிறுவர்-சிறுமியருக்கு திருக் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கும் சப்தமும் கேட்டுக் கொண்டே இருக்கும்.அதேபோல் மக்ரிபு வேளைகளிலும்..!ஆகால் இன்று என்ன நிலைமை..?ஒரு வீட்டிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிப் பாடல் அல்லது தொடர்களின் கதைகளை அந்தத் தெரு முழுக்க உள்ள பெரும்பாலான வீடுகளிலிருந்து தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டே போகும் அளவுக்கு நிலைமை தலைகீழாகிவிட்டது.இந்தத் தொலைக்காட்சித் தொடர்கள் திரைப்படங்களைவிட மிக மோசமான விளைவை ஏற்படுத்தித் தந்துவிட்டன.*

- ve;j tifapy;..?

*இதன் காரணமாக, நன்றாக அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள், மணமுடித்த மகளிர் மணமுடிக்காத பெண்கள் ஆகியோர் கூடா நட்பு-ஒழுக்கம் மற்றும் அதேபோல் வன்முறைகள் இவையெல்லாம் மற்ற சமூகங்களைப் பாதித்திருப்பதுபோல் முஸ்லிம் சமூகத்தைப் பாதித்திருக்கக் கூடாது ஆனால்,பாதித்திருப்பதைக் காண்கின்றோம்.திருமணம் முடிக்காத பெண்கள் ஓடிப் போவது ஒருபுறம்.., முடித்த பெண்களும் ஓடிப் போகின்ற அவலநிலை தமிழகத்தில் முஸ்லிம் சமூகம் மத்தியில் இருக்கின்றது.*

*அதேபோல் மிக வருத்தத்துக்குரிய செய்தியும் இருக்கின்றது. நீங்கள் செய்தித்தாள்களில் பார்த்திருப்பீர்கள்.நான் படித்த சென்னைப் பள்ளிக்கூடத்தில் ஒன்பதாம்*

**ஃபேஸ் புக்கில் ஃப்ரண்ட்ஸ் ஆகி.. அதனை சொல்வது முறையாக இருக்காது. பிரபல்யமான முஸ்லிம் ஊர்களில்கூட சிலர் கண்டவர்களுடன் ஓடிப் போகின்ற அவலம் நிகழ்ந்திருக்கின்றது.**




வகுப்பு படிக்கும் ஒரு முஸ்லிம் மாணவன்,பள்ளி வகுப்பறையிலேயே தனது ஆசிரியை ஒருவரை கத்தியால் குத்தி கொன்ற துர்ச்சம்பவம் நடந்துள்ளது.

நல்லவேளையாக, பெரும்பாலான கல்வியாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் அதற்கு அந்த மாணவனை மட்டும் குறை சொல்லாமல் சூழலையும் காரணம் காட்டி விளக்கப்படுத்தினார்கள். இல்லையென்றால் இந்த சம்பவம் முஸ்லிம்கள் என்றால் தீவிரவாதிகள்தான் எனும் ஒரு ஆக்கபூர்வமற்ற சித்திரம் முஸ்லிம் சமுதாயம் மீது சுமத்தப்பட்டிருக்கும்.

● ,J Fwpj;J cq;fs; gpd;னூ}l;lf; fUj;J vd;d?

பொதுவாக நோக்கினால் முஸ்லிம் சமுதாயம் கல்வி கற்க வேண்டும்.ஜமாஅத்களில் பள்ளிக்கூடங்கள் துவக்க வேண்டும்.சாதாரண ஒரு தொழிலாளிகூட தன் மகனை பொறியியலாளராக ஆக்க வேண்டும் எனம் சிந்தனையெல்லாம் பரவலாக இருப்பது நல்ல விஷயமே..!

நமது சமூக அமைப்புக்களும் அதற்கான விழிப்பு உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.அதெல்லாம் பாராட்டத்தக்க அம்சங்களே..!ஆனால், ஆக்கபூர்வ விளைவுகளைத் தரவேண்டிய ஊடகங்களோ மிக மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்துகின்றன.

ஃபேஸ் புக்கில் ஃப்ரண்ட்ஸ் ஆகி.., அதன் மூலம் தொடர்புகள் முறையற்றதாகி.., விளைவுகள் விபரீதமாகி விடுகின்ற அவலங்கள் குறித்து அன்றாடம் நாம் பார்க்கின்றோம்.செய்தித்தாள்களில் வாசிக்கவும் செய்கின்றோம். அதனை விலாவரியாக சொல்வது முறையாக இருக்காது.இத்தகைய நிகழ்வுகளுக்கு முஸ்லிம்களும் இலக்காகி நிற்பது வேதனையளிக்கின்றது.

அவ்வளவு ஏன்.., பிரபல்யமான முஸ்லிம் ஊர்களில்கூட சிலர் கண்டவர்களுடன் ஓடிப் போகின்ற அவலம் நிகழ்ந்திருக்கின்றது.இதுகுறித்து நமது சமுதாயம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.எனினும் இப்படியான விளைவுகள் மிகவும் கவலை தரக்கூடிய அம்சங்களே..!

vdpDk; r%f tpopg;G czu;T Fwpj;Jg; NgRk;NghJ...> rpy Clfq;fNs$l ,UNtWgl;l Kfq;fisf; nfhz;ljhf cs;s #oYk; ,Uf;fpd;w epiyikapy; vj;jif tpopg;G czu;it r%fk; iff;nfhs;s Ntz;Lk; vd;W epidf;fpd;wPu;fs;..?

பேராசிரியரின் எண்ணங்கள்.., அடுத்த இதழில்.., இறைநாடின்..!



# ஆடவர் தலைமை கிளையில்..!

IPC- சார்பாக புனித ரமளான் செயல்பாடுகள் குறித்த திட்ட அறிவிப்பை வெளியிடுகின்றார், துணைப் பொது மேலாளர் அஷ்ஷெய்க் அப்துல் அஜீஸ் அல்-துவைஜ் அவர்கள் (நடுவில்) ..!அருகில் நிலையத்தின் ஜகாத் மற்றும் ஸகாத் பிரிவின் பொது மேற்பார்வையாளர் அஷ்ஷெய்க் டாக்டர் காலித் அல்-மஸ்கூர் (வலது ஓரம்) மற்றும் நிலைய மக்கள் தொடர்புத் துறையின் அஷ்ஷெய்க் ஜோதா அல்-ஃபார்ஸி..!
















இஸ்லாமிய நிலைய தலைமை கிளையில் இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவும் தமிழக சகோதரர்கள்..!

IPC ஊடகத்துறை நிகழ்வொன்றில், சத்தியத்தின்பால் தான் கவரப்பட்டதற்கான காரணத்தை விளக்கிப் பேசுகின்றார் தமிழகப் பொறியாளர் சகோதரர் முஹம்மத் தாஹிர் அவர்கள்..!நிகழ்ச்சியில், இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய தமிழக சகோதரர்கள் மற்றும் மாற்று மொழி சகோதரர்களும் கலந்துகொண்டனர்.



கொரிய தூதரகத்தில் நடந்த புனித ரமளான் நிகழ்வொன்றில், கொரிய சகோதரர்களுக்கு இஸ்லாமிய நிலைய, தலைமையகம் சார்பாக அறிவைத் தூண்டும் கொரிய மொழி நூல்கள் அடங்கிய பரிசுக் கைப்பை..!

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை ஜீஊ ஆடவர் தலைமை கிளை மற்றும் ஸ ால்மியா மகளிர் கிளை சார்பாக ஜீஊ தமிழ்ப்பிரிவின் சகோ. மு.அ.அப்துல் முஸவ்விர் மற்றும் கொரிய மொழி ஆர்வலரான குவைத் மாணவி சகோதரி. மர்யம் ஆகியோர் செய்திருந்தனர்.





ஈகைத் திருநாள் நிகழ்வில் இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய தமிழக சகோதரர்கள்

## ஆடவர் தலைமை கிளை விழாவில்..!









## மகளிர் தலைமை கிளை - ரவ்தா-வில்..!





ரவ்தா, மகளிர் தலைமை கிளையில் நடைபெற்ற புனித ரமளான் சிறப்பு சொற்பொழிவு மற்றும் நோன்பு திறப்பு நிகழ்வில்..!





ரவ்தா, மகளிர் தலைமை கிளையில் நடைபெற்ற புனித ரமளான் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில்..!





ரவ்தா, மகளிர் தலைமை கிளையில் நடைபெற்ற கிர்கியான் நிகழ்வில் மழலையர்..!

இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோதரர் டாக்டர். முஹம்மத் காஸிம் அவர்களுக்கு பிரிவு உபசார விழா IPC தலைமையகத்தில் நடைபெற்றது.





வசந்தத்தின் வாசக சிறுமி ஸுல்ஃபா-வின் திருக் குர்ஆன் வசனங்கள் ஓதுதலோடு ஆரம்பித்த நிகழ்வில், வசந்தம் ஆசிரியர் மு.அ.அப்துல் முஸவ்விர் அவர்களின் துவக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், நவீன உலகின் போராட்டங்களினூடே இஸ்லாமிய அழைப்புப் பணியில் சகோ. காஸிம் அவர்களின் ஈடுபாடு குறித்து சிலாகித்துப் பேசினார்.

தனது ஏற்புரையில், சகோ. காஸிம் , தாய்நாட்டுக்குத் திரும்பி செல்லும் தான் முதலில் தன் குடும்பத்தினர் மற்றும் ஏனைய முஸ்லிமல்லாத சகோதரர் மத்தியில் அழைப்புப்பணி செய்ய இருப்பதாகக் கூறி,இத்தகைய ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்து, இஸ்லாமிய சகோதரத்துவத்தை பறைசாற்றிய இஸ்லாமிய நிலையத்துக்கு தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அரபி மாத இதழும், வசந்தத்தின் புரவல தாய்ப் பத்திரிகையின் செயலருமான சகோ.மஹ்மூத் அவர்கள், நினைவுப் பரிசினை வழங்கி கவுரவித்தார்.கடந்த வாசகர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் இதே நிகழ்வில் பரிசுகள் வழங்கப்பட்டன. மிஸ்பாஹ் உர்தூப் பத்திரிகை துணை ஆசிரியரான சகோ.ஏஜாஸ் அஹ்மத் அவர்களும்,IPC தொழில்நுட்பத் துறையின் ட்ரஸ்டெக் நிறுவனம் சார்ந்த தமிழக சகோதரர் முஹம்மத் அமீன் அவர்களும் வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

சகோ. காஸிம் அவர்களுக்கு வாழ்த்துக்கள், பிரார்த்தனைகளுடனும் மற்றும் இரவு உணவுடன் விழா இனிதே முடிவடைந்தது.விழாவுக்கான ஏற்பாடுகளை இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய தமிழக சகோதரர்கள் இணைந்து சகோ. ஷம்ஸுத்தீன் மேற்பார்வையில் நேர்த்தியாக செய்திருந்தனர்.



**மகளிர் கிளை**

**கேதான்..!**



கேதான் மகளிர் கிளையில் தமிழ் சகோதரிகளுக்கு
கற்கைநெறி பட்டய அளிப்பு விழா..!



**மகளிர் கிளை**

**கேதான்..!**



கேதான் மகளிர் கிளையில் இலங்கை சகோதரிகளுக்கு உணவுப்பொருட்கள் வழங்கும் விழா.,!
மற்றும் இந்தியர்களுக்கான சிறப்பு நிகழ்வு ..!



**மகளிர் கிளை**

**சால்மியா..!**



சால்மியா மகளிர் கிளையில் நடைபெற்ற இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய தமிழ்
சகோதரிகளுக்கான தனிப்பட்ட வகுப்புக்கள்..!




**மகளிர் கிளை**

**சால்மியா..!**



சால்மியா மகளிர் கிளையில் நடைபெற்ற இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய
தமிழ் சகோதரிகள் மற்றும் அழைப்புப்பணிக்கான வழிமுறை கவனிப்பில்..!

# முஸ்லிமா..,
# இயேசு கிறிஸ்து...??




**இறைவன், இறைபுதல்வன்,பரிசுத்த ஆன்மா என முக்கடவுள் பரிணாமத்தை தந்தது கிறித்துவம் அவருக்கு..!எங்கும் அவர் கூறிடவில்லை நானே இறைவன் என்று..! இறைவ-னின் அடியான் மற்றும் தூதர் மட்டுமே அவர் என்று சொன்னது இஸ்லாம் அன்று..!ஆகியது இன்று அதுவே உண்மை என்று..!**

*உலகில் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களின் வழிப்பாட்டிற்குரியவராக கருதப்படும் இயேசு கிறிஸ்து ஒரு முஸ்லிம் என பிரபல அமெரிக்க பேராசிரியர் தனது நீண்ட ஆய்வில் கண்டுபிடித்துள்ளார்.*

*அமெரிக்காவில் அயோவா லூதர் கல்லூரியில் மத விவகாரத்துறை பேராசிரியர் ராபர்ட் எஃப்.ஷெடிங்கர் தாம் இயேசு முஸ்லிம் என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கிறார். றயள தநளரள ய அரள-டஅஐ? என்ற தனது புதிய நூலில் அவர் இதனை தெளிவுப்படுத்துகிறார்.*



**எனது கற்பித்தல் முறை மற்றும் மதங்களைக் குறித்த அனைத்து புரிதல்களையும் மீளாய்வுக்கு உட்படுத்த மாணவியின் தலையீடு தூண்டுகோலாக அமைந்தது. இயேசுவிற்கு ஏற்ற மதம் இஸ்லாமாகும். ஏனெனில், அது ஒரு மதம் அல்ல! மாறாக,அது சமூக நீதிக்கான இயக்கமாகும். இயேசுவின் வாழ்க்கையும், அவரது நீதிக்கான செயல்பாடுகளும் இஸ்லாத்தோடு ஒத்துப்போகிறது. ஆகையால்தான் இயேசு முஸ்லிம் என நான் முடிவுச்செய்தேன்.**

*இயேசு முஸ்லிமா? என்ற கேள்வியுடன் அவர் நூலை துவக்குகிறார். ஆம்! அவர் முஸ்லிமே! என்பதுதான் தனது கேள்விக்கான பதிலாக இறுதியில் பேராசிரியர் ஷெடிங்கர் குறிப்பிடுகிறார்.*

*மதங்கள் குறித்த ஷெடிங்கரின் கற்பித்தல் குறித்து வகுப்பில் ஒரு மாணவி எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்து அவர் இஸ்லாத்தைக் குறித்தும் இதர மதங்களைக் குறித்தும் அதிகமாக ஆராய தீர்மானித்தார்.*

*“இஸ்லாம் மார்க்கத்துடன் தொடர்பில்லாத காரியங்களை நான் கற்பிப்பதாக முஸ்லிம் மாணவி ஒருவர் சுட்டிக்காட்டியது எனக்கு இஸ்லாத்தைக் குறித்து கூடுதலாக ஆராய தூண்டுகோலாக அமைந்தது”- என ஷெடிங்கர் கூறுகிறார்.*

*ஃபாக்ஸ் சானலுக்கு அளித்த பேட்டியில் ஷெடிங்கர் கூறியது: ‘எனது கற்பித்தல் முறை மற்றும் மதங்களைக் குறித்த அனைத்து புரிதல்களையும் மீளாய்வுக்கு உட்படுத்த மாணவியின் தலையீடு தூண்டுகோலாக அமைந்தது. இயேசுவிற்கு ஏற்ற மதம் இஸ்லாமாகும். ஏனெனில் அது ஒரு மதம் அல்ல! மாறாக,அது சமூக நீதிக்கான இயக்கமாகும். இயேசுவின் வாழ்க்கையும், அவரது நீதிக்கான செயல்பாடுகளும் இஸ்லாத்தோடு ஒத்துப்போகிறது. ஆகையால்தான் இயேசு முஸ்லிம் என நான் முடிவுச்செய்தேன்.’ இவ்வாறு லூதர் கல்லூரியின் மத விவகார பாடத்துறையின் தலைவரான ராபர்ட் எஃப்.ஷெடிங்கர் கூறினார்.*

*வகுப்பில் முஸ்லிம் மாணவி கேள்வி எழுப்பியது 2001-ஆம் ஆண்டிலாகும். அதன் பின்னர் அவர் தனது உண்மையை தேடிய ஆராய்ச்சியைத் தொடர்ந்தார் என ஃபாக்ஸ் சேனல் கூறுகிறது.*

# தீர்வு தரும் வாழ்க்கை நெறி..!
# வனிதையர் முன்னேற்றத்துக்கு அதுவே சரி..!!

மகளிரின் தற்கொலைகள் அதிகமாகுவதைத் தடுக்க தீர்வு தான் என்ன..?

பள்ளி நிர்வாகம், பொற்றோர், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். விழிப்பு உணர்வு நிகழ்வுகளை நடத்த வேண்டும். பெண்களின் கைப்பேசிகளுக்கு ஆபாசக் குறுந்தகவல்களையும் படங்களையும் அனுப்புகிற ஈனர்களைக் கண்டறிந்து கைது செய்யும் வசதியை செல்பேசி நிறுவனங்களே உருவாக்கித் தர வேண்டும். அத்தகையர்களின் சிம் கார்டுகளைத் தடை செய்ய வேண்டும். இல்லையென்றால் அந்த நிறுவனங்களின் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருமுறை இவர்களின் வலையில் ஒரு பெண் சிக்கிவிட்டால் அதன் பாதிப்புகளை மனம் விட்டுப் பரிமாறிக் கொள்ள குடும்பத்திலோ பள்ளிக்கூடத்திலோ அவர்களுக்கு யாரும் இல்லை. பள்ளியிலேயே இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் ஒத்துழைப்புடன் ஓர் ஆலோசனை மையத்தை நிறுவலாம்.




வரதட்சணை, பெண் சிசுக்கொலை, பெண் சொத்துரிமை, ஈவ் டீசிங், குடும்ப வன்முறை என்று பலவற்றுக்கும் சட்டங்கள் வந்துவிட்டன. ஆனால், சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தித் தப்பிப்பதுதான் அதிகமாக இருக்கிறது. சட்டங்களைச் செயல்படுத்துவதிலும் அரசு இயந்திரம் மெத்தனமாக இருக்கிறது. மக்கள் தொகையில் பாதியாக இருக்கும் பெண்களுக்கென்றே வரும் நோய்களான கர்ப்பப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், மெனோபாஸ் பிரச்னைகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து நலம் காக்கும் சிந்தனை எத்தனை சமூகத்தில் ஒழுங்காய் நடக்கின்றது.?இதுவும் ஒருவித மறைமுக வன்கொடுமைதான்.!

நாம் மேற்சொன்ன பிரச்னைகள் அனைத்துக்கும் முடிவுகட்ட வேண்டுமெனில், முதலில் தனிமனித ஒழுக்கம் மேலோங்க வேண்டும். பின்னர், மகளிர் வன்கொடுமைகள் களைய தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும். தண்டனைகள், ஒரு முன்னெச்சரிக்கை ஆயுதமாக பிரயோகிக்கப்பட்டால்தான்.., குற்றங்கள் அறவே ஒழியும்.இத்தகு தூய தோற்று வித்தலுக்கு சமூகம் அழகிய சூழலை உருவாக்க வேண்டும்.

பிரச்னைகளின் ஆதாரமான மனிதன் அந்த சூழலை தன் விருப்பத்துக்கு ஏற்ப அமைத்துக் கொண்டால் அது ஒருசார் நிலையைத்தான் ஏற்படுத்துமே தவிர சரியான தீர்வைத் தராது.

எனவே,தனிமனித ஒழுக்கம்,சமூக ஒழுக்கம்,ஆண்-பெண் உளத்தூய்மை,மகளிர் பாதுகாப்பு அனைத்தும் மேலோங்க எம்மைப் படைத்த இறைச்சட்டங்களே உதவ முடியும்..!

அதனை அமல்படுத்தும் வழிமுறையைக் காட்டுவதே இஸ்லாமிய வாழ்க்கை நெறி..!

அது அனைத்துத் துறைகளிலும் அமலாகிவிட்டால்.., வனிதையர் மீதான வன்கொடுமைக்கு அடிக்கப்பட்டுவிடும் சாவுமணி!

அதற்குதுணை போகட்டும் இறையருளின் உன்னத பாணி!

தொடர் இத்துடன் முடிந்தது..

# குஞ்சு மிதித்து முடமான கோழிகள்.,!

## அன்பான அநாதைகள்..!

குஞ்சுகள் மிதித்து
கோழிகள் எல்லாம்
முடமாகிப் போனது,
முதியோர் இல்லத்தில்..!

அளவுக்கும் மிஞ்சியதால்
அன்பும் நஞ்சாகி போனது
பருக கொடுத்த பாலுக்காக
தெருவில் கிடக்கிறாள் இன்று..!

கால் வயிறு கஞ்சியுண்டு
கைபிடி சேர்த்த காசுக்கு
கணக்கு கேட்டு
கம்பி கூண்டுக்குள் நிறுத்தியிருக்கிறான்.!

சோகத்தை உருவாக்கி
தாக்கி அடித்ததில் கொடுத்ததில்..,
ஏழு பிள்ளைகளுக்கும்
சமமான பங்குண்டு..!

கருவிழிக்குள்
கண்ணீர் நிறைந்திருக்கும்
காலியான இடம்
வயிற்றில் இருந்ததினால்..!

பட்ட படிப்பு படித்தவன்
சட்டம் பேசுகிறான்.!
படிக்க வைத்தவனை
கிடத்தி வைத்திருக்கிறான் மூலையில்..!

அரிதாரம் இல்லாமலே
நடிக்க கற்றுக்கொண்டான்
அரங்கேற்றம்
எங்கள் முன்னே..!

பாலுற்றி சோறு
ஊட்டுகையில்
பாசத்தை ஊட்ட
மறந்தாலோ என்னவோ..!

மூணு கிரவுண்டு வீட்டில்
முழுவதும் நிரப்பியிருக்கிறது
உயிரற்ற பொருட்கள்,
உயிருள்ளவனை வெளியேற்றிவிட்டு..!

ஒழுக்கத்தை கைவிடேல் என்பதை
ஒழுங்காக புரிந்து கொண்டான்,
ஒழுக்கமாக சேர்த்து விட்டான்
ஒரு காப்பகத்தில் என்னை..!

சொத்துப் பிரச்னை வரக்கூடாதென
பிரித்து கொடுத்தேன்,
வயித்து பிரச்சினை வருமென
அறிந்தும் அறியாமலே..!

எங்கிருந்தோ தேடி வந்து
இணைந்து கொண்டது
முதுமை நண்பனாக
என்னிடத்தில்..!

எந்த புள்ளியில்
இந்த குருட்டு (பிள்ளைகள்)பறவைகள்,
திசைமாறியதென தெரியவில்லை
எனக்கு..!

என்னைப்போல் கிழட்டு பறவைகள்
இளைப்பாற இடங்களை
தேடிக் கொண்டிருக்கிறது -கையில்
பல காகித சீட்டுகளை ஏந்திக்கொண்டு..!

பண்பு, பாசம், கருணை , இரக்கம்
அத்தனையும் அன்பு மகன்
அபார்ட்மண்ட் குடியிருப்பு அஸ்திவாரத்தில்
புதைக்கப்பட்டு இருக்கிறது..!

வறுமை இருக்குமிடமெல்லாம்
தானாகவே பொறுமை
வந்து அமர்ந்து கொள்கிறது,
அனுபவத்தில் ஆராய்ந்தது..!

'அண்ணன் (அக்கா)' என்றான் ஒருவன்.!
'ஐயா' என்றாள் ஒருத்தி
'கிழவா(வி)' என்றழைக்கப்படுகிறேன்
யாரோ ஒருவர்களால் இன்று..!

தோல் சுருக்கம் வந்தபின்னே
வாழ்வில் பணச்சுருக்கம் வருகிறது.!
பொருளுக்கு மதிப்பிருக்கிறது
பெற்றவர்க்கு மதிப்பில்லாமல் இருக்கையில்!

வயிற்றுக்கான போராட்டம்
இந்திய சுதந்திர போராட்டத்தை பெரிது.!
ஆங்கிலேயரிடம் கிடைத்தது அன்று.,!
ஆண்மக்களிடம் அடங்கிக்கிடக்குது இன்று!

தனித்திருக்கும் தீவும்
ஒதுக்கி வைத்திருக்கும் ஆளும்
ஒன்றுதான்
எங்களைப் போல்..!

பெற்றவர்களால் கைவிடப்பட்டவர்கள்
மட்டும் "அநாதைகள்" அல்ல..!
பிள்ளைகளால் கையெறியபட்ட
பெற்றவர்களும் வாழ்ந்து கெட்ட
அன்பான அநாதைகளே..!!



யூஸுஃ:ப்பும் சகோதரர்களும்.! 9

# அரசரின் கனவு..!

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில் மழலைப்ரியன்

ஒரு நாள் இரவு எகிப்து அரசர் ஒரு கனவு கண்டார். அதில் ஏழு வற்றிய பசுக்கள், கொழுத்த ஏழு பசுக்களைத் தின்றன.

பிறகு ஏழு பசுமையான கதிர்களையும் ஏழு காய்ந்த கதிர்களையும் கண்டார்.

இந்தக் கனவின் பொருளைக் கூறுமாறு அரசர் பலரிடமும் கேட்டார். ஆனால், யாருக்கும் பொருள் தெரியவில்லை.

“இது ஏதோ குழப்பமான கனவு!இது எதனைக் குறிப்பிடுகின்றது என எங்களுக்குத் தெரியவில்லை”என்றார்கள்.

யூஸு ஃபுடன் சக கைதியாக இருந்தவனுக்கு யூஸு ஃபின் நினைவு வந்தது. கனவுகளுக்கு சரியான பொருள் கூறுவதில் அவர் வல்லவராயிற்றே!அவன் அரசரிடம் கூறினான்: “உங்கள் கனவின் பொருளை நான் கண்டுபிடிக்கின்றேன். இதோ விரைவில் திரும்புகின்றேன். ”

அவன் நேராக சிறைக்கு ஓடினான். யூஸு ஃபிடம் பேசினான். தனது மறதிக்காக அவரிடம் மன்னிப்பு கேட்டான் வந்த நோக்கம் குறித்தும் சொன்னான். அரசரின் கனவுக்கான சரியான பொருளை உங்களால்தான் சொல்ல முடியும்” என்று கெஞ்சினான்.

*அரசர் கண்ட கனவின் பலனை யூஸுஃப் கூறினாரா..?பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

## திருக் குர்ஆன்

அத்தியாயம் 107
**அல்மாவூன்**
மக்காவில் அருளப்பட்டது
வசனங்கள்: 7

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَرَءَيْتَ الَّذِىْ يُكَذِّبُ بِالدِّيْنِ ۝١

108:1 அராயதல்ல(zi) யுகஸ்ஸி(zi) பு(bu) பி(b)த்தீ(dee)ெ ஃ.பஸா(za)லிகலல்லஸி(zi) யத்(dh)உல் யதீம்

107:1 மறுமையில் நற்கூலி தண்டனை கொடுக்கப்படுவதைப் பொய்யென்று கூறுபவனை நீர் பார்த்திருக்கிறீரா?

فَذٰلِكَ الَّذِىْ يَدُعُّ الْيَتِيْمَ ۝٢

ஃபஸா(za)லிகலல்லஸி(zi) யத்(dh)உல் யதீம்

107:2 அவன்தான் அநாதையை மிரட்டி விரட்டுகின்றான்.

وَلَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ۝٣

107:3 வலாயஹுஉ ஸ்ஸுஉ (zu) அலா த(tha)’ஆமில் மிஸ்கீன்

107:3 மேலும், வறியவரின் உணவை அளிக்கும்படித் தூண்டுவதில்லை.

# பாரத விடுதலையின் நாதம்..!

## அடித்தளமிட்ட முஸ்லிம் சாகசம்..!!



**திருக் குர்ஆனின் கூற்றுப்படி ஒரு ஆண் சுவனத்தில்“““ஹூர்“ என்னும் பெண்ணைத் துணையாகப் பெறுவான். அப்படியெனில் சுவனத்தில் ஒரு பெண்ணுக்குத் துணையாக என்ன கிடைக்கும்.?.**

*டாக்டர் ஜாகிர் நாயக் அவர்களிடம் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆங்கிலத்தில் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலின் தமிழாக்கம் இதோ..!*

ஹூர்' பற்றி அருள்மறை குர்ஆன் குறிப்பிடுகிறது. அருள்மறை திருக் குர்ஆனில் ஹூர்' பற்றி நான்கு இடங்களில் சொல்லப்படுகிறது. அத்தியாயம் 44:54,52:20,55:72 மற்றும் 56:22.

'ஹூர்' என்ற அரபி வார்த்தைக்கு 'அழகிய கன்னியர்' என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அருள்மறை குர்ஆனை மொழிபெயர்த்த பல மொழிபெயர்ப்பாளர்கள் - குறிப்பாக உர்தூ மொழிபெயர்ப்பாளர்கள் ''ஹூர்' என்ற அரபி வார்த்தைக்கு ''அழகிய கன்னியர்' என்று மொழியாக்கம் செய்துள்ளனர். ''ஹூர்' என்ற அரபி வார்த்தைக்கு ''அழகிய கன்னியர்' என்று பொருள் கொண்டால் - அது ஆண்களுக்கு மட்டும்தான் என்று ஆகிவிடும். அப்படியெனில் பெண்களுக்கு என்ன கிடைக்கும்?.

''ஹூர்' என்ற அரபி வார்த்தையின் பொருள். 'ஹூர்' என்ற அரபி வார்த்தை 'அஹ்வார்' என்ற அரபிவார்த்தைக்கும் (ஆண் பாலருக்கு பயன்படுத்தப்படக் கூடியது) ' 'ஹவ்ரா' என்கிற அரபி வார்த்தைக்கும் (பெண் பாலருக்கு பயன்படுத்தப்படக் கூடியது) உரிய பன்மையான (Plural) வார்த்தை ஆகும். குறிப்பாக சுவனத்தில் இருக்கக் கூடிய அழகிய கண்களை உடைய ஆண்பாலரையோ அல்லது பெண் பாலரையோ குறிப்பிடுவதற்கு மேற்படி வார்த்தையை பயன்படுத்துவர்.

அருள்மறை திருக்குர்ஆன் வேறு சில வசனங்களில் சுவர்க்கத்தில் நீங்கள் ''முத்தஹ்றதுன்' தூய்மையான மற்றும் புனிதமான ''அஸ்வாஜ்' - இணை அல்லது துணை அல்லது ஜோடியினைப் பெருவீர்கள் என்று குறிப்பிடுகிறது. ''முத்தஹ்றதுன்' என்கிற அரபி வார்த்தைக்கு தூய்மை மற்றும் புனிதம் என்று பொருள் கொள்ளலாம்.

மேலும், (நபியே! இவ்வேதத்தில்) நம்பிக்கை கொண்டு (அதன் அறிவுரைகளுக்கேற்ப) நற்செயல்கள் புரிவோர்க்கு, கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங்கள் நிச்சயமாக உண்டு எனும் நற்செய்தியைக் கூறுவீராக! அந்தச் சுவனங்களில் ஏதேனும் ஒரு கனி அவர்களுக்கு உணவாக வழங்கப்படும் போதெல்லாம் அக்கனிகள் பூமியிலுள்ள கனிகளைப் போல் தோற்றத்தில் ஒத்திருப்பதால், இத்தகைய கனிதான் முன்பு (உலகில்) நமக்கு உணவாக வழங்கப்பட்டது" என அவர்கள் கூறுவார்கள். இன்னும் அங்கு அவர்களுக்குத் தூய்மையான துணைகளும் உண்டு. மேலும், அங்கு அவர்கள் நிரந்தரமாக வாழ்வார்கள். -திருக் குர்ஆன் 2:25




**சுவனத்தில் பெண்கள் மிகவும் சிறப்பான ஒன்றினைப் பெறுவார்கள்**

மேலும் எவர்கள் நம் வசனங்களை ஏற்று நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களை கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனப் பூங்காக்களில் நுழைவிப்போம். அங்கு அவர்கள் என்றென்றும் நிலையாகத் தங்கி வாழ்வார்கள். அங்கு அவர்களுக்கு மிகத் தூய்மையான துணைவியர் இருப்பர். மேலும் அவர்களை நாம் அடர்ந்த நிழலில் அமரச் செய்வோம். -திருக் குர்ஆன் 4:57

மேற்படி அருள்மறை குர்ஆனின் வசனங்களிலிருந்து நாம் அறிவது என்னவெனில் ''ஹூர்' என்ற அரபி வார்த்தை குறிப்பாக எந்த பாலை (ஆண்பால் அல்லது பெண்பால்) குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்பதுதான். அருள்மறை குர்ஆனை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த முஹம்மத் ஆஸாத் ' 'ஹூர்' என்ற அரபி வார்த்தைக்கு Spouse (கணவருக்கு மனைவியும் - மனைவிக்கு கணவரும்) என்று மொழியாக்கம் செய்துள்ளார். அருள்மறை குர்ஆனை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த யூசுப் அலி ' 'ஹூர்' என்கிற அரபி வார்த்தைக்கு Companion (இணை அல்லது துணை) என்று மொழியாக்கம் செய்துள்ளார். இன்னும் பல மார்க்க அறிஞர்களின் கருத்துப்படி - சுவனத்தில் ஒரு ஆணுக்கு அழகிய கண்களை உடைய பெண்ணும், ஒரு பெண்ணுக்கு அழகிய கண்களை உடைய ஒரு ஆணும் இணையாக அல்லது துணையாக அல்லது ஜோடியாக கிடைப்பார்கள்.

பெண்கள் இவ்வுலகில் கிடைக்கப்பெறாத ஒன்றை, சொர்க்கத்தில் கிடைக்கப் பெறுவார்கள். அருள்மறை குர்ஆனில் ' 'ஹூர்' என்கிற அரபி வார்த்தை பெண்பாலை குறிப்பிடத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சில மார்க்க அறிஞர்கள் ஆணித்தரமாக நம்பி வருகிறார்கள்.

அவர்களுக்கு பதிலளிக்கும் முகமாக நபிமொழி ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சுவனத்தில் ஆண்களுக்கு அழகிய கண்களையுடைய பெண்கள் துணையாக கிடைப்பார்கள், சுவனத்தில் பெண்கள் எதை கிடைக்கப்பெறுவார்கள் என்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போது - சுவனத்தில் பெண்கள் மனித கண்கள் எதுவும் கண்டிராத - மனித காதுகள் எதுவும் கேட்டிராத - மனித மனங்கள் எதுவும் எண்ணிப்பாராத ஒன்றினைப் பெறுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். மேற்படி பதில் சுவனத்தில் பெண்கள் - மிகவும் சிறப்பான ஒன்றினைப் பெறுவார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.



நூல்
2030-இல் தமிழக முஸ்லிம்கள்
ஆசிரியர்
CMN சலீம்
வெளியீடு
சமூகநீதி முரசு பதிப்பகம்
சென்னை-1
தொ:0091 44 25225780
விலை:இந்திய ரூ. 30.00

## நூல் அறிமுகம்

### 2030-இல் தமிழக முஸ்லிம்கள்

இந்திய துணைக்கண்டம் ஒரு மாபெரும் அறிவுக்களஞ்சியமாக உருவெடுத்து நிற்பது வையகம் அறிந்த ஒன்றே..!அத்தகையதொரு அறிவுசார் நிலத்தில் வாழும் முஸ்லிம்களிலும் பெரும் அறிவுஜீவிகளும், சிந்தனையாளர்களும் இருந்திருக்கின்றார்கள், இருக்கவும் செய்கின்றார்கள்.!

அந்தப் பரந்த பூமியின் ஓர் உறுப்பாக இருக்கும் தமிழக முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருந்தது,இருக்கின்றது என்பதை பற்றி மட்டுமே நாம் பேசுவது வாடிக்கை.ஆனால், தொலைநோக்குப் பார்வையுடன் இன்னும் 20 ஆண்டுகள் கழித்து தமிழக முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருக்கும், இருக்க வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டியிருக்கின்றது இந்த நூல்.அதனால், வருங்கால தமிழக முஸ்லிம் வளத்துக்கு இன்றே அழகாக வடிவமைத் திட்டம் வகுக்க ஒரு வாய்ப்பை இந்நூல் ஏற்படுத்தித் தருகின்றது எனலாம்.

உடல்நலம்தான் அனைத்துக்கும் ஆணிவேர் என்பதால் அந்தத் தலைப்பிலிருந்து ஆரம்பித்து,இஸ்லாமியக் குடும்பங்களின் விழுமியத் தேவைகளை வலியுறுத்துகின்றது இந்நூல்!


முன்னேற்றத்துக்கு உற்ற துணையாக நிற்கும் தொழில்துறை,ஊடகம்,அரசியல் அதிகாரம் என்று பல்வேறு துறைகளிலும் தமிழக முஸ்லிம்களின் வெற்றிட நிரப்பல் அவசியங்களையும் எளிமையாக தேவையாக்கியிருக்கின்றார் ஆசிரியர். அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, மகளிரை வெறும் கல்வி உரிமைக்குரியவர்களாக ஆக்க கோராமல், அவர்களைக் கல்வியாளர்களாக மாற்றுவோம் என நூலாசிரியர் முழங்கியிருப்பது அவருடைய சமூக அக்கறையை காட்டுகின்றது.

கல்வித்துறையில் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சிந்தனையாளர் தமிழக முஸ்லிம்களுக்குக் கிடைத்திருப்பதை அந்த சமூகம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொண்டால் பயன் பெறலாம். அவருடன் உரையாடிய வகையிலும்,நூலின் பொதுத் தன்மையையும் வைத்துப் பார்த்தால், அமைப்பு சாராத நபராகவும் அவர் இருப்பதாக தெரிவது ஒரு பலமான அம்சம்!

-தேனீ

அறிஞர் அண்ணா


## பார்த்து.., படித்து.., கேட்டு..!



"நாம் ஹிந்து என்று கூறிக்கொண்டால்,இவைகளை நமது தெய்வங்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டுமே?அதை வணங்க வேண்டுமே ?!! இதைக்கேட்டால் உலகத்தில் உள்ள நாகரீக மக்கள் நம்மை கேவலமானவர்கள் என்று கேலி செய்வார்களே?! இந்த கண்றாவிக்கு என்ன செய்வது?இந்த ஆபாசத்தை நம் தலையில் தூக்கி போட்டுக்கொள்ள,நமக்கு எப்படி மனம் துணியும்? ஆகவேதான் நான் ஹிந்து என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறேன்"

- அறிஞர் அண்ணா-வின் 'ஆரிய மாயை' நூலிலிருந்து

## இஸ்லாமிய இயக்க அறிவுஜீவி அறிஞர் மறைந்தார்..!



நவீன உலகின் இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படும் டாக்டர்.அப்துல் ஹக் அன்ஸாரி அவர்கள் அக்டோபர் 3-ஆம் தேதியன்று காலமானார்கள்.அன்னாருக்கு வயது 81.

இஸ்லாமிய இயக்கத்தின் அகில இந்திய தலைவராக இருந்த அவர் Learning the Language of Quran எனும் புகழ்பெற்ற அகராதி நூலை எழுதியவர்.திருக் குர்ஆனின் தாய்மொழியான அரபி மொழியை எளிய வகையில் புரிந்து அதன் மூலம் திருக் குர்ஆனை தெளிவாகப் படிக்க புரிந்துகொள்ள இந்நூல் பாதை அமைத்தது என்பது ஏகோபித்த கருத்து.

தனது உயர்நிலைப் பள்ளிப் பருவம் முதற்கொண்டே இஸ்லாமிய இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அன்னார் அவர்கள், எண்ணி முடியாத அளவுக்கு பல நூல்களுக்கு ஆசிரியர்.இஸ்லாம் மற்றும் ஏனைய மதங்களை ஒப்பீடு செய்யும் இஸ்லாமியக் அகாடமி எனும் அலிகரில் அமைந்த ஆய்வு மையத்தின் இயக்குநராக 1996 முதல் இருந்து வந்தார். கேரளா,சாந்தபுரம்,ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழக வேந்தராகவும் இருந்தவர்.

அரபி,தத்துவம் மற்றும் வரலாற்றுத் துறைகளில் நல்ல புலமை பெற்ற இவர் பல நல்ல இஸ்லாமிய நூல்களை தந்தவர்.இறைவன் அவருக்கு சுவனப்பேற்றை வழங்கவும், அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்துக்கு அழகிய பொறுமை தரவும் அனைவருடன் இணைந்து வசந்தம் இறைஞ்சுகின்றது..!

## உம்முல் குரா பல்கலைக்கழகம்
### ஸவூதி அரேபியா

புனித மக்கமாநகரில் அமைந்திருக்கும் இந்த பல்கலைக்கழகம், 1949-இல் ஒரு இஸ்லாமிய ஷரீஆ-மார்க்க சட்டக் கல்லூரியாக தோற்றுவிக்கப்பட்டது. கல்வித்துறையின் ஏறக்குறைய இருபதுக்கும் மேற்பட்ட பட்டப்படிப்புகள் கொண்ட கல்லூரிகளைத் தன் கீழ் கொண்டுள்ளது இப்பல்கலைக்கழகம்.

அறிவியல், பொறியியல்,சமூகவியல்,மொழி மற்றும் இஸ்லாமிய அழைப்புப்பணித் துறை என்று பல்வேறு தளங்களில் இதன் கல்லூரிகள் நடைபெறுகின்றன. இதுமட்டுமல்லாது, மகளிருக்கென்று இலக்கியம்,பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் தனிக்கல்லூரிப் படிப்புகள் உண்டு.

பல்கலைக்கழகத்தின் இணையதள முகவரி: www.uqu.edu.sa

# உலகின் மிகவும் அபாயகரமான சுற்றுலாத்தலம்!

அந்த இடத்தைப் பார்த்தால் அம்மாடியோவ் என்ன ஒரு ஆழம் என்று ஒருகணம் தலை விறைத்துப் போய் நிற்பீர்கள். அந்த இடம் அவ்வளவு பிரமிப்பாக இருக்கும்.

ஆம், இது தான் உலகின் மிகவும் அபாயகரமான சுற்றுலாத்தலம். சுற்றுலாப் பயணிகளை சுண்டி இழுக்கும் இந்த இடத்தில் அவர்களுக்குத் தேவையான எந்தவித பாதுகாப்பு வசதிகளும் இல்லை.

ஆபத்தை எதிர்நோக்கும் தன்மை உள்ள சுற்றுலாப் பயணிகளே இந்த ஆபத்தான இடத்தை நோக்கி போகலாம். தற்செயலாக கால் இடறி விழுந்தால் 1,982 அடி அதலபாதாளத்தில் விழ வேண்டும்.

நார்வேயில் அமைந்துள்ள Pulpit Rock என்று அழைக்கப்படும் இந்தப் பிரதேசம் வருடாந்தம் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றது.




# உலகில் அதிகம் பரவும் மார்க்கம் இஸ்லாம்..! போப் அறிவிப்பு.!

உலகில் அதிகம் பரவும் மார்க்கம் இஸ்லாம் என போப் விடுத்த அறிக்கையை மேற்கோள்காட்டி வாட்டிகன் இணையதளம் செய்திவெளியிட்டுள்ளது.



அதிகம் பரவிவரும் மார்க்கங்களில் இஸ்லாம் முன்னிலை வகிப்பதாகவும் கிறிஸ்தவ மதம் நம்பிக்கையாளர்களைவிட மூன்று மில்லியன் அதிக எண்ணிக்கையுடையோராக முஸ்லிம்கள் உள்ளனர் என்றும் உலக மக்கள் தொகையில் நூற்றில் 17.5 விகிதத்தினர் கிறிஸ்வர்களென்றால், 19 வீதமானோர் முஸ்லிம்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வருடந்தோறும் 40 ஆயிரம்பேர் இஸ்லாத்தில் இணைவதாகவும் கிறிஸ்தவ, யூத மற்றும் பிற மதத்தினர் இவ்வாண்டின் இறுதிப் பகுதியாகும்போது அதிகமாக இஸ்லாத்தில் இணையும் வாய்ப்புள்ளது என்றும் கூறியுள்ளார்.



# ஐன்ஸ்டீன் மூளை..!

படத்தில் இருப்பது மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் உடைய மூளை.

இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவருடைய மூளையை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் வியந்து போய் பேசுகிறார்கள்.

இத்தனைக்கும் அவரது மூளையில் 3 சதவிகிதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாம், அது பத்துசதவிகிதமாக இருந்திருந்தால் என்னென்ன கண்டுபிடிப்புகள் வந்திருக்குமோ!.

# நீருக்கடியில் முதல் மஸ்ஜித்!

வரலாற்றில் முதன்முறையாக உலகில் முதலாவது நீருக்கடியில் பள்ளிவாசல் சவூதிஅரேபியாவின் தனியார் சுழியோடிகள் குழுவொன்றினால் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது நிருக்கடியில் பள்ளிவாசல் அமைக்கப்பட்டு முடிந்ததுடன், அதில் தாம் தொழுகையை நிறைவேற்றியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜோர்தான் எல்லைப்பகுதிக்கு அண்மையாக தபூக் நகரின் வடமேற்கு கடற்பரப்பில் இப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. மணல் நிரப்பப்பட்ட பெரிய பிளாஸ்திக் குழாய்கள் பயன்படுத்தப்பட்டு சுழியோடிகளால் இவ் அடையாளப் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளதாக அரேபிய நாளிதழ் ஒன்று தெரிவிக்கின்றது.

நீருக்கடியில் பள்ளிவாசலின் நிர்மாணப் பணியின் போது, இறுதிப் பகுதிகளைஇணைக்கும் போது நண்பகல் தொழுகைக்கான நேரம் வந்ததாகவும், பின்னர்வரலாற்றில் முதலாவது நீருக்கடியில் பள்ளிவாசலில் தாம் கூட்டாக நண்பகல் தொழுகையை நிறைவேற்றியதாகவும் சுழியோடியான ஹம்தான்பின் ஸாலித் மதூதி தெரிவித்தார்.



போட்டிப் படிவம் முகநூலிலும் கிடைக்கும்
facebook/vasanthamtamil

# அறிவுப் போட்டி!

கடந்த (செப்டம்பர் 2012) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி,பின்வரும் கூற்றுக்கள் மற்றும் கூற்றுக்கு உரியவர்களின் படங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமானவர்களின் படங்களுக்கு அருகில் உள்ள வெற்றிடத்தில் இடுக..!

மொத்தம் 3 பரிசுகள்

1 முகநூலில் மடல் வரைந்த வசந்த வாசகியின் முகநூல் அடையாளப்படம் இது..!




2 மகளிர் திருக் குர்ஆன் மனனப் போட்டி!



3 கடந்த இதழில் பேட்டியளித்தவர்



4 பாரத மொழிகள் இணைந்த சங்கம விழா.,!



5 ஸவூதி-இன் முதல் பெண் உயரதிகாரி



## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 11. 2012 10. முடிவுகள் வசந்தம் டிஸம்பர் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

## சுயவிவரம்

பெயர் Name

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்/நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait

# அன்பும் அறனும் உடைத்தாயின்...!

உங்கள் இல்லறம்
நல்லறம் பெற நாடும்..

## வசந்தம்






























# தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்..!



அப்போது நாம் அவரை அழைத்துக் கூறி-
னோம்: "இப்ராஹீமே! நீர் கனவை நனவாக்கி
விட்டீர். நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே
கூலி வழங்குகின்றோம்.திண்ணமாக, இது
ஒரு தெளிவான சோதனையாய் இருந்தது."
மேலும், ஒரு பெரும் பலியை ஈடாகக்
கொடுத்து அக்குழந்தையை நாம் விடுவித்துக்
கொண்டோம்.பின்னர் தோன்றிய தலைமுறைக-
ளில் அவருடைய புகழையும், நற்பெயரையும்
விட்டு வைத்தோம்.சாந்தி உண்டாகட்டும்,
இப்ராஹீம் மீது!நன்மை புரிவோருக்கு நாம்
இத்தகைய கூலியையே வழங்குகின்றோம்.
திண்ணமாக, நம்மீது நம்பிக்கைகொண்ட
அடியார்களுள் ஒருவராக அவர் திகழ்ந்தார்.
திருக் குர்ஆன் 37 : 104-111

கூறுவீராக: "நிச்சயமாக, எனது
தொழுகையும் என்னுடைய
வழிபாடுகளும் என்னுடைய
வாழ்வும் என்னுடைய மரண-
மும் அகிலங்களின் அதிபதியான
அல்லாஹ்வுக்கே உரியனவாகும்."
திருக் குர்ஆன் 6 : 162

